**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.97/2023**

2026 –ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 06.04.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ஆதித்தன் (DW–1) | வயது | : | 61 /2026 |
| க/த பெயர் | : | திரு. சந்தானம் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | காடுவாக்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனது சொந்த ஊர் காடுவாக்குடி என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கும் விரோதம் எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் செல்லபிள்ளையார்கோட்டத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தானது கே.ஆர்.எம் எஸ்டேட்டிற்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். அதன் விஸ்திரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர், 44 செண்ட். தாவா சொத்து ஆரம்பத்தில் யார் குத்தகைதாரராக இருந்தார் என்றால் எனது தாத்தா சுப்ரமணியன், அதனை அடுத்து சந்தானம் குத்தகைதாரராக இருந்தார்கள்.
2) எஸ்டேட் நிலம் எவ்வளவு எங்கள் அனுபவத்தில் இருந்தது என்றால் தாவா சொத்தையும் சேர்த்து 16 மா, 32 குழி இருந்தது. 16 மா, 32 குழியும் தற்போது எங்களது அனுபவத்தில் உள்ளதா என்றால் உள்ளது. அந்த சொத்துக்களில் ஒரு பகுதி ONGC எண்ணெய் நிறுவனத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டது என்றால் 5 ½ மா எடுத்து கொண்டார்கள். நீண்ட கால குத்தகை கால அடிப்படையில் எடுத்து கொண்டார்கள் என்றால் சரிதான். அதன் சர்வே எண் தெரியுமா என்றால் தாவா சொத்து அல்லாத வேறு சொத்தை எடுத்து கொண்டார்கள். அதன் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.238/8, மற்ற இரண்டு சர்வே எண் தெரியாது, மொத்த விஸ்திரணம் 5 ½ மா எடுத்து கொண்டார்கள்.
3) ONGC எண்ணெய் நிறுவனத்தால் எடுத்துக் கொள்ளப்பட்ட நீண்ட கால குத்தகைக்கு குத்தகை தொகையாக கேஆர்எம் எஸ்டேட்டிற்கு தொகை செலுத்தி வருகிறார்கள், எனக்கு எதுவும் தொகை கொடுக்கவில்லை என்றால் எனக்கும் 1/3 பங்கு கொடுத்து வருகிறார்கள். தாவா சொத்து உள்ளிட்ட மொத்தம் 16 மா, 32 குழியும் தற்போது யார் யார் வசம் எவ்வளவு உள்ளது என்பது சொத்தின் உரிமையாளரான கேஆர்எம் எஸ்டேட்டிடம் கேட்டால் தெரியும் என்றால் சரிதான். கடைசியாக தாவா சொத்திற்காக குத்தகை தொகை செலுத்தியதற்கான ரசீது

கைவசம் உள்ளதா என்றால் இல்லை. அந்த எஸ்டேட்டில் கணினி ரசீது குத்தகை தொகை செலுத்தியதற்காக ஆதாரமாக கொடுப்பார்கள் என்றால் சரிதான்.

4) தாவா கிராமத்தில் எஸ்டேட்டிற்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் சுமார் 500 ஏக்கர் நிலம் உள்ளது. குத்தகை தொகை செலுத்தாத நபர்கள் மீது வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து குத்தகை தொகை வசூல் செய்வார்கள் என்றால் சரிதான். வருவாய் நீதிமன்றத்தில் குத்தகை தாரர்கள் வழக்கறிஞர்களை நியமனம் செய்து குத்தகை தொகை செலுத்தி வருவார்கள் என்றால் சரிதான். அதன்படி என்மீது ஏதேனும் வழக்கு தாக்கல் செய்து குத்தகை தொகை எஸ்டேட்டிற்கு செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. வாதி தாக்கல் செய்த ஆவணங்களை பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

5) வாதியிடம் 17.03.1991 இல் தாவா சொத்துக்களை குத்தகையை சரண்டர் செய்து ரூபாய்.12,960/- தொகை பெற்றுக்கொண்டேன் என்றால் இல்லை. வாதி தாவா சொத்தை மோசடியான ஆவணம் கொண்டு அபகரித்து கொண்டார் என்று காவல் நிலையத்தில் நான் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் நான் எதிர்கட்சி செய்து எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. **(தற்போது சாட்சியானவர் பதில் மனு தாக்கல் செய்ததாக சாட்சியம் அளிக்கிறார்).** எதிர்வழக்குரையில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான்.

6) எதிர்வழக்குரையில் பாரா 3 இல் 1 முதல் 9 ஆவணங்களை வாதி மோசடியாக உற்பத்தி செய்து கொண்டு தாவா சொத்தை வாதியிடமிருந்து அபகரிக்க வேண்டி சங்கதிகளை ஜோடித்து உண்மைக்கு மாறான சங்கதிகளை ஜோடித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணங்களை பார்வையிடவேண்டி நீதிமன்றத்தில் குறிப்பாணை கொடுத்து ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை. மேற்கண்ட ஆவணங்களை நான் பார்த்தால்தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்ற விபரம் தெரிய வரும் என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணங்களை பார்க்காமல் வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் இல்லை, பார்த்தேன்.

7) எந்த தேதியில் மேற்கண்ட ஆவணங்களை பார்த்தேன் என்றால் 2 மாதங்களுக்கு முன்பு பார்த்து தெரிந்து கொண்டேன். அதில் என்னுடைய கையெழுத்து இல்லை என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அந்த ஆவணங்களில் என்னுடைய கையெழுத்து இல்லை என்பதால் மேற்கண்ட ஆவணங்களை என்னுடைய கையெழுத்துடன் ஒப்பீடு செய்ய மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த ஆவணங்களில் என்னுடைய கையெழுத்து இல்லை என்பதால் நடவடிக்கை எடுக்க வேண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இந்த வழக்கு நிலுவையில் இருப்பதால்

கொடுக்கவில்லை. தாவா சொத்திற்கான குத்தகை பதிவு யார் பெயரில் உள்ளது என்றால் எனது தரப்பினர் சந்தானம் பெயரில் உள்ளது.

8) வாதியானவர் தாவா சொத்துடன் தொடர்புடைய வருவாய் நீதிமன்ற ஆவணங்களை வா.சா.ஆ–1 , வா.சா.ஆ.2 தாக்கல் செய்துள்ளதை பார்த்தேனா என்றால் பார்த்தேன். தாவா சொத்தானது வாதி குத்தகை செய்து வருவதற்காக வருவாய் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் எனக்கு தெரியாமல் பெறப்பட்ட ஆவணம். 17.03.1991 இல் இருந்து இந்நாள்வரை நான் தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வந்து உரிமையாளரான கேஆர்எம் எஸ்டேட்டிற்கு குத்தகை தொகை செலுத்தி வருகிறேன் என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் என்வசம் உள்ளதா என்றால் உள்ளது, இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து நிலம் உள்ளது என்று பிரித்து காண்பிக்க கூடிய குத்தகை ரசீது உள்ளதா என்றால் மொத்தமாக குத்தகை தொகை செலுத்தியதற்கான ரசீது உள்ளது.

9) எனது பெயரை குறிப்பிட்டு குத்தகை தொகை செலுத்தியதற்கான ரசீது உள்ளதா என்றால் எனது குடும்ப உறுப்பினர் பெயரில் உள்ளது. குத்தகை தாசில்தார் குத்தகை பதிவு தாவா சொத்து என் பெயரில் உள்ளது என்பதற்கான பதிவு உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.9 ஆவணமானது வாதி பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாமல் உற்பத்தி செய்யப்பட்டது. 1991 இல் இருந்து 2023 வரை நான் எங்கு இருந்தேன் என்றால் ஊரில் தான் இருந்தேன். தாவா சொத்து தொடர்பாக வாதி பெயரில் குத்தகை பதிவு செய்ய குத்தகை பதிவு அலுவலர் அழைப்பாணை வா.சா.ஆ–1 அனுப்பினார் என்றால் சரிதான், எனக்கு அழைப்பாணை வரவில்லை ஆனால் தெரிந்து கொண்டு ஆட்சேபணை செய்தேன்.

10) தாவா சொத்து தொடர்பாக எனது கிராமத்தில் பஞ்சாயத்து நடந்ததா என்றால் 2023 இல் நடந்தது. யார் கொடுத்த புகாரின் அடிப்படையில் பஞ்சாயத்து நடந்தது என்றால் வாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் நடந்தது. பஞ்சாயத்தில் என்ன பேசி முடிக்கப்பட்டது என்றால் பஞ்சாயத்தில் பேசமுடியாது என்றும், நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து முடித்து கொள்ள பேசி முடிக்கப்பட்டது. அதன் அடிப்படையில்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நானோ பிரதிவாதியோ தாவா சொத்து தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை.

11) 1991 க்கு பிறகு தாவா சொத்தை நான் விவசாயம் செய்து வருகிறேன் என்பதற்கான வரவு செலவு கணக்கு விபரம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு சாகுபடி செய்ததற்கான கடன் வாங்கினேனா என்றால் ஆமாம், கருப்புகிளார் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கினேன். 1991 இலிருந்து வழக்கு தாக்கல் செய்யும் வரை தாவா சொத்தை நான் சாகுபடி செய்து வருகிறேன் என்பதற்கான பயிர் காப்பீடு ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ளது

என்பதற்கான வேளாண்மை துறையால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு ஆழ்குழாய் கிணறு, மின்சார இணைப்பு உள்ளதா என்றால் இல்லை.

12) தாவா சொத்தானது 17.03.1991 லிருந்து எனது அனுபவத்தில் இல்லாததால்தான் மேற்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. நான் சரண்டர் செய்த தாவா சொத்துக்களின் மதிப்பு அதிகமானதால் ஏதேனும் அனுபவம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் கட்சி நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. வாதி அனுபவத்தில் உள்ள தாவா சொத்தில் அத்துமீறி பிரச்சனை செய்ததால்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.07 10:06:58 +0530

District Munsif
Mannargudi.